அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்வதற்கு மனம் இல்லை என்றாலும் நிதிநிலை காரணமாக, இல்லை என்று கூறியிருக்கிறார் என்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்தினுடைய காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் எந்த ஒரு கோரிக்கையையும் வைக்காமலேயே மக்களைத் தேடிச்சென்று நிறைவேற்றிக் கொண்டிருக்கிற இந்தக் காலத்திலே வருகிற நிதி ஆண்டிலாவது தலையாமங்கலம் கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரங்கள் சரியானவுடன் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 213, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

213—

பட்டுக்கோட்டையில் சர்க்கரை ஆலை அமைத்தல்

*** 9772—திரு. கி. பாலசுப்பிரமணியன் :**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையிலும் அதனைச் சார்ந்த ஊர்களிலும் கரும்பு உற்பத்தி அதிகமாக உள்ளதால், ஒரு சர்க்கரை ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையிலே சர்க்கரை ஆலை அமைப்பது பற்றி கேள்வி கேட்டிருந்தேன். அதற்கு தொழில்அமைச்சர் அவர்கள் பதிலில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இது வழக்கமாக பட்டுக்கோட்டைக்கு சொல்லக்கூடிய பதிலாகத்தான் இருக்கிறது. (சிரிப்பு) அப்படி இருந்தபோதிலும் நான் மறு முறையும் - சமீபத்திலே மத்திய அரசினால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை ஒன்றைப் பார்த்தபோது தென் மாநிலங்களிலே 5 இடங்களுக்கு சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்காக ஒப்புதல் அளித்துள்ளார்கள். அந்த நிலையிலே தென் மாவட்டத்தில், தஞ்சை மாவட்டத்தில் ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நிலையிலே தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பட்டுக்கோட்டையிலே அந்த ஆலையை அமைக்க இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.,

[1994 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாநில அரசு 5 சர்க்கரை ஆலைகள் வேண்டுமென்று சொல்லி, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. அதில் ஒன்று தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை வேண்டும் என்று கேட்டு மத்திய அரசினுடைய அனுமதிக்காகக் காத்திருக்கிறோம். ஏற்கெனவே மன்னார்குடி பகுதியில் திரு. ஐயார் வாண்டையார் என்பவர் ஒரு சர்க்கரை ஆலை கேட்டு அனுமதி வாங்கி அந்த ஆலையைத் துவக்காமல் 3 முறை அதை புதுப்பித்துக் கொண்டே வருகிற காரணத்தாலேயும், பட்டுக்கோட்டை பகுதியில் தேவையான கரும்புகள் இல்லாத காரணத்தாலும், பட்டுக்கோட்டை பகுதியில் இருக்கின்ற கரும்புகள் எல்லாம் அதற்கு அருகிலே இருக்கிற குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்குத் தேவையாக இருப்பதால், பட்டுக்கோட்டையில் புதிய சர்க்கரை ஆலை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டிலாவது எனது கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும், பட்டுக்கோட்டையிலே அந்த சர்க்கரை ஆலையை ஆரம்பிப்பதற்கு குன்னூரைச் சேர்ந்த தனியார் ஒருவர் அதை ஆரம்பிப்பதாக என்னிடம் சொல்லி இருக்கிறார். அவருக்கு அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் அவர் மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறார் என்பதையும் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அது நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்களுக்குத் தெரிந்த இரகசியம் எல்லாம் எனக்குத் தெரியாது. (சிரிப்பு) பட்டுக்கோட்டை, பேராவூரணி மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் உள் அடக்கிய பகுதிகளில் விளையும் கரும்பைப் பயன்படுத்தி அறந்தாங்கியில் புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவ மத்திய அரசு ஏற்கனவே உரிமம் வழங்கியிருந்தது. அந்தச் சர்க்கரை ஆலையை நிறுவ நாள் ஒன்றுக்கு சுமார் 2,500 மெட்ரிக் டன் கரும்பும், ஆண்டு ஒன்றுக்கு 4 லட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன் கரும்பும் தேவைப்படும். இந்தக் கரும்பை விளைவிக்க சற்றொப்ப 17 ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட வேண்டும். எனவே அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்குத் தேவையான கரும்பின் அளவுக்கு மிகுதியாக எவ்வளவு கரும்பு அறந்தாங்கியில் நிறுவ உத்தேசித்திருக்கும் புதிய சர்க்கரை ஆலைக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கும் என்பதைக் குறித்து சர்க்கரைத் துறை ஆணையர் ஆய்வுகள் நடத்தினார். அத்துடன் நபார்ட் நிறுவனமும் அப்பகுதியில் கூடுதல் கரும்பு பயிரிடும் தரத்தை அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆய்வு

நடத்தியது. பட்டுக்கோட்டை பகுதியில் புதிய நீர்ப்பாசன ஆதாரங்களுடன் ஏற்படுத்த வாய்ப்பு இல்லை என்றும் புதிய கிணறுகள் தோண்ட வாய்ப்பு இல்லை என்றும் இந்த ஆய்விலே கண்டறியப்பட்டது. எனவே பட்டுக்கோட்டை, அறந்தாங்கியில் புதிய சர்க்கரை ஆலை நிறுவும் திட்டத்தை அரசு கைவிடுவது என்று ஏற்கனவே முடிவு செய்தது. இந்த முடிவை ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டு தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கின்றபோது தெளிவாக இந்த அவையில் அறிவித்துள்ளார். எனவே, பட்டுக்கோட்டை பகுதியில் மேலும் ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10.45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கு பட்டுக்கோட்டை தாலுக்கா, பேராவூரணி தாலுக்கா, ஒரத்தநாடு தாலுக்கா என்ற மூன்று தாலுக்காக்களிலும் கரும்பு விளைவிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அப்படி பயிர் விளைவித்து ஏற்றுமதி செய்கின்றபோது பல நேரங்களில் அவை கரும்பு ஆலைகளில் எடுத்துக்கொள்ளப்படாமல் வேறு ஆலைகளுக்குத் திருப்பி விடப்படுகின்ற சூழ்நிலையும் அதிகமாக உருவாகிறது. எனவே, இதை மனதில் கொண்டு, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி பகுதியிலே ஆலை உருவாக்குவதற்கு வழியில்லை என்று சொன்னாலும், அதற்கு அருகாமையில் உள்ள ஒரத்தநாடு பகுதியில் ஒரு ஆலையை உருவாக்கி கடைமடைத் தொகுதியான இந்தப் பகுதியில் கரும்பு அதிகமாக விளைவிக்கப்படுகின்ற சூழ்நிலை அதிகரிக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமானால் அது அமையும் இடம் தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளுக்கு குறைந்தது 25 கிலோ மீட்டர் தூரம் அப்பால் இருக்க வேண்டும். 2,500 டன்கள் அரைக்கப்பட கரும்பு இருக்க வேண்டும். ஏறத்தாழ 17,000 ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட வேண்டும். இந்த சாத்தியக் கூறுகள் இருந்தால்தான் புதிய சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே பட்டுக்கோட்டையானாலும், அறந்தாங்கியானாலும், ஒரத்தநாடு ஆனாலும் இந்த வாய்ப்பு இல்லாத காரணத்தினாலே புதிய சர்க்கரை ஆலை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS